**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**

**CC. No. 66 /2026**

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ம் நாள் வியாழன் கிழமை அரசு தரப்பு சாட்சி– (PW– 3 )**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அயூப்கான் | தொழில் | | சுயதொழில் |
| த/பெ. | : | அப்துல்வகாப் | ஊர் | | திருப்பந்துருத்தி |
| வயது | : | 53/26 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

**16.04.2026**

**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரி காணொளி காட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கறிஞர் ஆஜர்**

**முதல் விசாரணை:**

நான் திருப்பந்துருத்தியில் வசித்து நடுக்கடையில் சுயதொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. முதலாவது கையொப்பம் சாஜகான் என்பவருடையது. 14.11.2025ம் தேதி நடுக்கடையிலிருந்து திருப்பந்துருத்திக்கு காலை சுமார் 9 மணியளவில் நானும் அ.சா.2ம் காட்டுக்கோட்டை பைபாசு அருகே சென்றபோது போலிசார் அங்கு நின்றுகொண்டிருந்தார்கள், பைக் திருடிய நபர் ஒருவரை பிடித்து வைத்திருந்தார்கள். அவரிடமிருந்து பைக்கை பெற்றதற்காக சாட்சி கையொப்பம் கேட்டார்கள் . நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். போலிசார் பிடித்துவைத்திருந்த நபர்தான் காணொளி காட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்டுள்ள நபர். எதிரி அப்போது வைத்திருந்த வண்டி TVS வண்டி. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். **ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நடுக்கடையில் உள்ள முகமது ரபிக் மற்றும் முகமது ரியாஸ் ஆகியோரை எனக்கு தெரியும். எனது உறவினர்கள் அல்ல. தெரிந்த நபர்கள். நான் காவல்நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு, காட்டுக்கோட்டை பைபாசில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் எதிரியை புகைப்படத்தில் காண்பித்ததை வைத்து நான் நீதிமன்றத்தில் எதிரியை அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** <u>இல்லை.</u>

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**
**CC. No. 66 /2026**

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ம் நாள் வியாழன் கிழமை அரசு தரப்பு சாட்சி– (PW– 2 )**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாஜகான் | தொழில் | | சுயதொழில் |
| த/பெ. | : | சையது முகமது | ஊர் | | மேலதிருப்பந்துருத்தி |
| வயது | : | 53/26 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

**16.04.2026**

**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரி காணொளி காட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கறிஞர் ஆஜர்**

**முதல் விசாரணை:**

நான் திருப்பந்துருத்தியில் வசித்து சுயதொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. இரண்டாவது கையொப்பம் அய்ப்கான் என்பவருடையது. சுமார் 6 மாதங்களுக்கு முன்பு ஒருநாள் தேதி நினைவில்லை, நடுக்கடையிலுள்ள எனது மளிகை கடையில் காலை சுமார் 11 மணியளவில் இருந்தபோது, திருவையாறு போலிசார் என்னை காவல்நிலையத்திற்கு வரசொன்னார்கள்.

2) எனது கடையிலிருந்து எனது ஊருக்கு சென்றுகொண்டிருந்தபோது காட்டுக்கோட்டை பைபாஸ் அருகே போலிஸ் ரைடு பண்ணிக்கொண்டிருந்தார்கள். காணொளி காட்சிமூலம் ஆஜராகி உள்ள எதிரி அங்கு இருந்தார். அவர்தான் இதற்கு முன்பு சாட்சி சொல்லி சென்ற அ.சா.1ன் வண்டியை திருடினார். அதை நான் நடுக்கடையில் உள்ள கேமராவில் பார்த்தேன். எதிரியை எனக்கு தெரியுமா என்று போலிசார் என்னிடம் கேட்டார்கள், அவர்தான் வண்டியை திருடியவர் என்று நான் சொன்னேன். ஸ்டேசனில் வந்து கையொப்பம் போடசொல்லி சொன்னார்கள். அதன்பிறகு 1 வாரம் கழித்து நான் ஸ்டேசன் சென்று கையொப்பம் செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நடுக்கடையில் உள்ள முகமது ரபிக் மற்றும் முகமது ரியாஸ் ஆகியோரை எனக்கு தெரியும்.  முகமது ரபிக் எனது சகோதரர் , முகமது ரியாஸ் அவரது மகன். நான் சொல்வதுபோல் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் எனது சகோதரரின் மகன் முகமது ரியாஸ் என்பவருக்கு ஆதரவாக நான் இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.  அ.சா.1ன் பெயர் , ஊர் பற்றிய விபரம் எனக்கு தெரியாது.

**<u>மறுவிசாரணை –</u>** <u>இல்லை.</u>

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 66 /2026</u>

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ம் நாள் வியாழன் கிழமை அரசு தரப்பு சாட்சி–1 (PW– 1 )**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் | தொழில் | | **விவசாயம்** |
| த/பெ. | : | **பிச்சை** | **ஊர்** | | **சிறுபுலியூர்** |
| வயது | : | 65/26 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

<u>16.04.2026</u>

**<u>எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரி காணொளி காட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கறிஞர் ஆஜர்</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் சிறுபுலியூரில் வசித்து வருகிறேன். கடந்த 13.11.2025ம் தேதி மதியம் 1 மணியளவில் திருவையாறு – கும்பகோணம் செல்லும் ரோட்டில் வேலவன் கம்பூயுட்டர் சென்டருக்கு எதிரே உள்ள ஏடிஎம்மில் எனது சொந்தக்காரர் இளங்கோவனின் டிவிஎஸ்எக்சல் வண்டியை நான் ஓட்டிச்சென்று ஏடிஎம் வாசல் அருகில் வைத்தேன். கம்பூயுட்டர் சென்டருக்கு பணம் கட்ட சென்றேன். திரும்பி வந்து பார்த்தபோது அந்த வண்டியை காணவில்லை. வண்டி எண் 6862 . தேடிப்பார்த்தேன் , கிடைக்கவில்லை, வீட்டிற்கு சென்றேன். எனது தம்பி மகன் காவல்நிலையம் அழைத்துவந்து புகார் கொடுக்க வைத்தார். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது. அது நான் கொடுத்ததுதான் **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் உடனே வண்டியை கண்டுபிடித்து விட்டார்கள். கோர்ட்டில் ஒப்படைத்துள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள வண்டிதான் காணாமல்போய் கண்டுபிடிக்கப்பட்ட வண்டி. **CP No. 382/25 ஒப்படைக்கப்பட்ட இருசக்கரவாகனத்தின் புகைப்படங்கள் 4 எண்ணிக்கை அ.சா.ஆ.2 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

புகார் காவல்நிலையத்தில் எழுத்தரால் எழுதப்பட்டது. புகாரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வதுபோல் எதுவும் நடைபெறவில்லை என்றும், புள்ளிவிபர கணக்கிற்காக போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** <u>இல்லை.</u>

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.